# Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996

**Official Property Record**

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



# உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், நாமக்கல் அவர்களின் நடவடிக்கைகள்

## முன்னிலை. திருமதி.ரா.ரமணி, பி.இ.,

ந.க.எண். 293/2020 நாமா                                                                                    நாள். 12 .10.2020.

பொருள் : அனுமதியற்ற மனைப்பிரிவுகள், மனைகள் வரன்முறைப்படுத்துதல் திட்டம், 2017 - நாமக்கல் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் – நாமக்கல் மாவட்டம்–குமாரபாளையம் வட்டம் – பள்ளிபாளயைம் ஊராட்சி ஒன்றியம்– பல்லக்காபாளையம் கிராமம்– சர்வே எண்.43/1பி,2பி–ல் 4.47 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள ஸ்ரீ குமரகுரு நகர் என்ற அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்குதல் – தொடர்பாக.

பார்வை :

1. அரசாணை (நிலை) எண். 78, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் (ந.வ.4(3)) துறை நாள். 04.05.2017
2. அரசாணை (நிலை) எண். 172, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் (ந.வ.4(3)) துறை நாள். 13.10.2017
3. அரசாணை (நிலை) எண். 55 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் (ந.வ.4(3)) துறை நாள். 02.05.2018.
4. அரசாணை (நிலை) எண்.21 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் (ந.வ.4(3)) துறை நாள். 05.02.2019.
5. அரசாணை எண்.100 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் (ந.வ.4(3))த் துறை நாள்.01.07.2019.
6. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் வழிகாட்டு நெறிமுறை ந.க.எண். 13193/2017/LA2 நாள். 30.10.2017, 31.10.2017, 07.11.2017, 17.11.2017 மற்றும் 20.12.2017.
7. மனுதாரர் திரு.ஒ.பி.எஸ்.மகாதேவன், குமாரபாளையம் அவர்களின் ஆன்லைன் விண்ணப்ப எண்.DTCP/L/0662688/ 2017, நாள்.12.11.2018.
8. சேலம் மண்டல அலுவலக கடிதம் ந.க.எண்.1540/2020/சேம–3, நாள்.06.07.2020.
9. இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.293/2020/நாமா, நாள்.26.08.2020.

**********

**உத்தரவு:**

பார்வை 1, 2, 3, 4 மற்றும் 5–ல் கண்ட அரசாணையின்படியும் பார்வை 6–ல் கண்ட வழிகாட்டு நெறிமுறைகளின்படியும் பார்வை 7–ல் கண்ட கடிதத்துடன் பெறப்பட்ட உத்தேசம் பரிசீலனை செய்யப்பட்டு பார்வை 8–ல் கண்ட கடிதத்தினை தொடர்ந்து கீழ்காணும் உத்தரவு வழங்கப்படுகிறது.

நாமக்கல் மாவட்டம், குமாரபாளையம் வட்டம், பள்ளிபாளயைம் ஊராட்சி ஒன்றியம், பல்லக்காபாளையம் கிராமம், சர்வே எண்.43/1பி,2பி–ல் 4.47 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள ஸ்ரீ குமரகுரு நகர் என்ற அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு ம.வ(வரன்முறை)/நாமா எண்.009/2020 என எண்ணிடப்பட்டு கீழ்காணும் நிபந்தனைகளுடன் கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்படுகிறது.

| | |
|---|---|
| மனைப்பிரிவின் மொத்த பரப்பு | : 4.47 ஏக்கர் அல்லது 194713.20 ச.அடி |
| சாலைகளின் மொத்த பரப்பு | : 57018.325 ச.அடி |
| மொத்த மனைகள் | : 122 எண்ணம் |
| விற்கப்பட்ட மனைகளின் எண்ணிக்கை | : 42 எண்ணம் |
| விற்கப்பட்ட மனை எண்கள் | : 3–5,33–39,41–48,51–53,56, 76–80,82,86,91–97,106,108,109,112,114 மற்றும் 115. |
| விற்கப்படாத மனைகளின் எண்ணிக்கை | : 80 |
| விற்கப்படாத மனைகளின் எண்கள் | : 1,2,6–32,40,49,50,54,55,57–75,83–85, 87–90,98–105,107,110,111,113,116 மற்றும் 117. |
| விற்பனை செய்யப்படாத மனைகளின் பரப்பளவு | : 95050.50 ச.அடி |
| திறவெளி ஒதுக்கீடு (OSR) இடத்தின் பரப்பு பூங்கா (மனை எண் 118–122) | : 9505.050 ச.அடி **(10.00%)** |

**செலுத்தப்பட வேண்டிய கட்டண விபரம்**

1) பரிசீலனை கட்டணம் :

| | |
|---|---|
| இணைய தளம் வாயிலாக மனை ஒன்றிற்கு ரூ.500/– வீதம் பரிசீலனைக் கட்டணம் செலுத்திய மனை எண்களின் விபரம் | மனை ஒன்றிற்கு ரூ.500/– 80 வீதம் மனைகளுக்கு ரூ.40,000/- செலுத்தப்பட்டுள்ளது. |

பரிசீலனை கட்டணம் செலுத்தப்படாத மனைகளுக்கு அக்கட்டணத்தை இணையதளம் வாயிலாக செலுத்த வேண்டும்.

2) அனுமதியற்ற இம்மனைப்பிரிவுக்கு வரன்முறைப்படுத்தும் கட்டணம் செலுத்தப்பட வேண்டிய உரிய கணக்குத் தலைப்பிலும் வளர்ச்சிக் கட்டணம் உள்ளாட்சியின் வங்கி கணக்கிலும் செலுத்தல் வேண்டும்.

3) வரைபடத்தில் கண்டுள்ள OSR இடங்களை தவிர்த்து இதர மனைகளுக்கு அரசாணையின்படி உரிய கட்டணங்களை பெற்றுக்கொண்டு வன்முறைப்படுத்த தெரிவிக்கப்படுகிறது.

மேற்காணும் கட்டணங்களை செலுத்திய பின்னரே சம்பந்தப்பட்ட மனைகளுக்கு உள்ளாட்சியால் வரன்முறை ஆணை வழங்கப்பட வேண்டும். விற்கப்படாத மனைகளைப் பொறுத்தமட்டில் அனைத்து மனைகளுக்கு அல்லது பகுதி மனைகளுக்கு மட்டும் கட்டணத்தை செலுத்தி சம்பந்தப்பட்ட மனைகளுக்கான வரன்முறை ஆணையைப் பெற்றுக் கொள்ளலாம்.

பார்வை 1, 2, 3, 4 மற்றும் 5–ல் சுட்டிய அரசாணைகளின்படி மேற்காண் கட்டணம் தவிர வேறு கட்டணம் ஏதும் உள்ளாட்சி வசூலித்தல் கூடாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

<u>நிபந்தனைகள்</u>

1. அரசாணை (நிலை) எண். 172, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் (ந.வ.4(3)) துறை நாள். 13.10.2017–ல் விதி எண்.7(g)(ii)–ன்படி மனைப்பிரிவு வரைபடத்தில் உள்ளவாறு சாலைகள் மற்றும் திறந்தவெளி ஒதுக்கீடு (OSR) இடங்கள் சம்பந்தப்பட்ட உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டதாக கருதப்படும்.
2. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்னைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட கொள்கை அளவிலான ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி ரத்து செய்யப்படும்.
3. இம்மனைப்பிரிவில் அரசு புறம்போக்கு நிலம் ஆக்கிரமிப்பு குறித்து சம்பந்தப்பட்ட உள்ளாட்சி உறுதி செய்து கொள்ள வேண்டும்.

4. மனைப்பிரிவின் ஊடே நீர்நிலைகள் அமையுமாயின் அதற்கு பாதிப்பு ஏற்படாதவாறு கட்டிடங்கள் கட்டப்பட வேண்டும்.
5. மனைப்பிரிவின் ஊடே Tower Line, HT Line, LT Line and Power Line ஆகியன செல்லுமாயின் அவைகள் சாலையின் போக்கிற்கு மாற்றிய பின்னரே முறைப்படுத்தப்படல் வேண்டும்.
6. மனைப்பிரிவு அமையும் புல எண்களில் வழக்கு ஏதும் நிலுவையில் இருப்பது பின்னர் அறியப்பட்டால் மனைப்பிரிவுக்கு வழங்கிய ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி ரத்து செய்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
7. அரசாணை எண்.100 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள்.01.07.2019–ல் குறிப்பிட்ட நிபந்தனைகள் பின்பற்ற வேண்டும். மேலும் அரசாணையின்படி மனைப்பிரிவு சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடு பகுதி மனுதாரரால் தானமாக சம்மந்தப்பட்ட துறையில் ஒப்படைப்பு செய்த பின்னரே உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.
8. பார்வை 1, 2, 3, 4 மற்றும் 5 ஆகிய அரசாணைகளில் குறிப்பிட்ட நிபந்தனைகள் பின்பற்றப்பட வேண்டும்.
9. சாலை மற்றும் பொது ஒதுக்கீடு ஒப்படைப்பு செய்யப்படவில்லை எனில் இம்மனைப்பிரிவுக்கு வழங்கப்பட்ட ஒப்புதல் முன் அறிவிப்பு இன்றி ரத்து செய்யப்படும் என்ற விபரம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேற்கண்ட நிபந்தனைகளின் அடிப்படையில் கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் இரண்டு நகல்கள் மேல் நடவடிக்கைக்காக அனுப்பிவைக்கப்படுகிறது.

(ஒப்பம்) 12/10/2020
உதவி இயக்குநர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
நாமக்கல்.

**இணைப்பு**
மனைப்பிரிவு வரைபடம் இரண்டு நகல்கள்.

**பெறுநர்,**
தலைவர்,
பல்லக்காபாளையம் ஊராட்சி,
குமாரபாளையம் வட்டம்,
நாமக்கல் மாவட்டம்.

**நகல்**
1. திரு.ஓ.பி.எஸ்.மகாதேவன் மற்றும் எஸ்.கவிதா,
   க.எண்.2/444, அமுதா காம்ப்ளக்ஸ்,
   ஓலப்பாளையம்,
   குமாரபாளையம் அமானி கிராமம்,
   குமாரபாளையம் வட்டம், நாமக்கல் மாவட்டம்.
2. சார்பதிவாளர்,
   பள்ளிபாளையம் சார்பதிவாளர்
   அலுவலகம்,
   நாமக்கல் மாவட்டம்.
   — சாலை மற்றும் OSR பகுதியினை உள்ளாட்சியின் பெயரில் பதிவு செய்யும் பொருட்டு.
3. வட்டார வளர்ச்சி அலுவலர்,
   பள்ளிபாளையம் ஊராட்சி ஒன்றியம்,
   குமாரபாளையம் வட்டம்
   நாமக்கல் மாவட்டம்.
4. உதவி இயக்குநர் (நில அளவை),
   நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
   நாமக்கல் மாவட்டம்.
   — சாலை மற்றும் OSR பகுதியினை உள்ளாட்சியின் பெயரில் வருவாய் ஆவணங்களில் உட்பிரிவு செய்யும் பொருட்டு.
5. இருப்புக் கோப்பு

# பள்ளிபாளையம் வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), அவர்களின் நடவடிக்கைகள் முன்னிலை– திரு. வெ. கோவிந்தன்

ந.க.எண்.4814/ 2021 / தி1

நாள். 21.12.2021

பொருள்– வீட்டு மனைப்பிரிவுகள் – நாமக்கல் மாவட்டம் – பள்ளிபாளையம் வட்டாரம் – பல்லக்காபாளையம் ஊராட்சி /கிராமம் சர்வே எண் **43/1B,2B–ல் அமையும் 4.47ஏக்கர் (அ) 194713.20 சதுர** அடி பரப்பளவில் அமைந்துள்ள "ஸ்ரீ குமரகுரு நகர் " என்ற பெயரில் வீட்டு மனைகளாக பிரிக்கப்பட்டதில் விற்பனை செய்யப்படாத மனைப்பிரிவுகள் வரன் முறைப்படுத்துதல் மற்றும் அங்கீகாரம் வழங்குதல் – தொடர்பாக.

பார்வை–

1. அரசாணை (நிலை) எண்.78, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் (ந.வ.4(3)) துறை நாள் 04–05–2017.
2. அரசாணை (நிலை) எண்.172, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் (ந.வ.4(3)) துறை நாள்–13–10–2017.
3. அரசாணை (நிலை) எண்.55, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் (ந.வ.4(3)) துறை நாள்–02.05.2018.
4. அரசாணை (நிலை) எண்.21, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் (ந.வ.4(3)) துறை நாள்–05.02.2019.
5. அரசாணை (நிலை) எண்.100, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் (ந.வ.4(3)) துறை நாள்–01.07.2019.
6. திரு.O.P.S.மகாதேவன், த/பெ.G.P.சுப்பிரமணியம்(லேட்)அவர்களின் ஆன்லைன் விண்ணப்பம் எண். DTCP/ L/ 0662688/ 2017, நாள்– 12.11.2018.
7. நகர் ஊரமைப்புத் உதவி இயக்குநர், நாமக்கல் அவர்களின் உத்தரவு ந.க.எண் 293/2020 நாமா, நாள் – 12.10.2020
8. திரு.O.P.S.மகாதேவன்,த/பெ.G.P.சுப்பிரமணியம்(லேட்) என்பவரின் விண்ணப்பம் நாள்– 21.10.2021

✡✡✡✡✡

**உத்தரவு -**

நாமக்கல் மாவட்டம், பள்ளிபாளையம் வட்டாரத்திற்குட்பட்ட பல்லக்காபாளையம் ஊராட்சி/ கிராமம் சர்வே எண். **43/1B,2B**–ல் அமையும் 4.47ஏக்கர் (அ) **194713.20** சதுர அடி பரப்பளவில் அமைந்துள்ள "ஸ்ரீ குமரகுரு நகர் " அனுமதியற்ற குடியிருப்பு வீட்டுமனைகள் ஏற்படுத்தி முறையான அங்கீகாரம் இல்லாமல் வீட்டுமனைகள் விற்பனை செய்யப்பட்டுள்ளது. பார்வை 1, 2, 3, 4 மற்றும் 5–ல் காணும் அரசாணைகளில் அங்கீகாரம் இல்லாத வீட்டுமனைகளை வரன்முறைப்படுத்திக் கொள்ள வழிகாட்டி நெறிமுறைகள் வழங்கப்பட்டதை தொடர்ந்து பார்வை 6–ல் காணும் ஆன்லைன் விண்ணப்பம் வாயிலாக 76 வீட்டு மனைகளுக்கு அங்கீகாரம் வழங்கிட நாமக்கல் நகர் ஊரமைப்பு உதவி இயக்குனர் அவர்களுக்கு விண்ணப்பித்துள்ளதையடுத்து பார்வை 6–ல் காணும் ஆன்லைன் விண்ணப்பம் ஏற்கப்பட்டு பார்வை 7–ல் காணும் கடிதம் மூலம் நாமக்கல் நகர் ஊரமைப்பு உதவி

| வ. எண் | மனை எண் | சதுர மீட்டர் | கூராய்வு கட்டணம் | வரன்முறை கட்டணம் | வளர்ச்சி கட்டணம் |
|---|---|---|---|---|---|
| 60 | 88 | 92.94 | 500 | 4182 | 2324 |
| 61 | 89 | 92.94 | 500 | 4182 | 2324 |
| 62 | 90 | 92.94 | 500 | 4182 | 2324 |
| 63 | 98 | 92.94 | 500 | 4182 | 2324 |
| 64 | 99 | 92.94 | 500 | 4182 | 2324 |
| 65 | 100 | 92.94 | 500 | 4182 | 2324 |
| 66 | 101 | 202.91 | 500 | 9131 | 5073 |
| 67 | 102 | 141.73 | 500 | 6378 | 3543 |
| 68 | 103 | 174.26 | 500 | 7842 | 4357 |
| 69 | 104 | 92.94 | 500 | 4182 | 2324 |
| 70 | 105 | 92.94 | 500 | 4182 | 2324 |
| 71 | 107 | 92.94 | 500 | 4182 | 2324 |
| 72 | 110 | 144.05 | 500 | 6482 | 3601 |
| 73 | 111 | 105.02 | 500 | 4726 | 2626 |
| 74 | 113 | 92.94 | 500 | 4182 | 2324 |
| 75 | 116 | 92.94 | 500 | 4182 | 2324 |
| 76 | 117 | 92.94 | 500 | 4182 | 2324 |
| மொத்தம் | | 7424.48 | 38000 | 334101.6 | 185612 |

இது தொடர்பாக பரிசீலனை செய்ததில் மனுதாரர் மேற்கண்ட 7424.48 ச.மீ பரப்பளவு மனைக்கான பரிசீலணை கட்டணமாக ரூ. 38000/-ம், வரன்முறைக் கட்டணமாக 1 ச.மீக்கு ரூ. 45/- வீதம் 7424.48 ச.மீக்கு ரூ. 335000/-(ரூபாய் மூன்று இலட்சத்து முப்பத்து ஐந்து ஆயிரம் மட்டும்), உரிய அரசு தலைப்பில் Acct Code 021760800AT22730–ல் திருச்செங்கோடு ஸ்டேட்பேங் ஆப் இந்தியா வங்கியில் திருச்செங்கோடு சார் நிலை கருவூல இ–சலான் எண். 20210930573309 நாள்– 01.10.2021–ல் செலுத்தி அதற்கான அசல் சலானையும், வளர்ச்சிக் கட்டணமாக 1 ச.மீக்கு ரூ. 25/- வீதம் 7424.48 ச.மீக்கு ரூ.186000/-(ரூபாய் ஒரு இலட்சத்து என்பத்து ஆறு ஆயிரம் மட்டும்) நாள்– 01.10.2021–ல் பல்லக்காபாளையம் ஊராட்சியின் மனைப்பிரிவு அங்கீகார A/C. No. 6653640706 இந்தியன் வங்கி, பள்ளிபாளையம் கிளையில் செலுத்தியதற்கான அசல் இரசீதும் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

மேலும், சாலை பரப்பளவிற்கான 57018.325 ச. அடி மற்றும் பூங்கா பரப்பிற்காக 9967.375 ச.அடி பரப்பளவு ஆகியவைகளை குமாரபாளையம் சார்பதிவாளர் அலுவலகத்தில் தான பத்திர எண். 5362/2020 மேதகு தமிழ்நாடு அரசு ஆளுநர் அவர்களுக்காக, நாமக்கல் மாவட்ட தற்கால நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களுக்கும் பதவிக்கு பின்னிட்டு வருபவர்களுக்கும் என பதிவு

செய்து அசல் ஆவணங்கள் நாமக்கல் மாவட்டம் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது அதன் நகலினை இத்துடன் இணைத்துள்ளார். எனவே, அரசாணைகளில் தெரிவித்துள்ள நிபந்தனைகள் பூர்த்தி செய்த காரணத்தினால் பல்லக்காபாளையம் ஊராட்சி பகுதியில் அமைந்துள்ள "ஸ்ரீ குமரகுரு நகர்" மனைப்பிரிவில் மேற்கண்ட விற்பனை செய்யப்படாத 76 மனைப்பிரிவுகளுக்கு மட்டும் கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு மனைப்பிரிவு அங்கீகாரம் வழங்கி இதன்மூலம் உத்தரவிடப்படுகிறது.

## நிபந்தனைகள்

1. வீட்டுமனைபிரிவுகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள சாலைகள் தற்போதைய நிலையிலேயே இருக்க வேண்டும். சிறிய எவ்வித மாற்றங்களும் ஏற்படுத்தக்கூடாது.

2. மனைபிரிவு வரைபடத்தில் பிரிக்கப்பட்டுள்ள மனை நில அளவுகளின் விவரங்களை இவ்வலுவலக அனுமதியின்றி மாற்றி அமைத்தல் கூடாது.

3. வரன்முறை செய்து வழங்கப்படும் இம்மனைபிரிவுகளை வீடுகள் மட்டும் கட்டுவதற்கு பயன்படுத்த வேண்டும். அபாயகரமான மற்றும் அருவருக்கதக்க தொழிற்சாலைகள் ஏதும் ஏற்படுத்திட அனுமதியில்லை.

4. மனுதாரர் செலுத்தியுள்ள கட்டண விகிதங்களில் வேறுபாடுகள் ஏதுமிருந்து, கட்டணம் செலுத்த வேண்டியிருப்பது, ஏதேனும் பின்னர் கண்டறியப்படின் அதனை மனுதாரர் செலுத்த வேண்டும்.

5. விற்பனை செய்யப்படாத ஒவ்வொரு மனைபிரிவும் பத்திர பதிவு செய்யும் போது, மனைப்பிரிவு அங்கீகார வரைபட நகலினை இணைத்து பத்திர பதிவு செய்திடவேண்டும்.

6. அரசின் கொள்கை அளவிலான மனைப்பிரிவு அங்கீகாரத்தில் அரசு மாற்றங்கள் எதேனும் செய்து உத்திரவுகள் பிறப்பிக்கப்பட்டால் அந்த உத்தரவுகளுக்கு மனுதாரர் கட்டுப்பட்டவராவர்.

7. பத்திர பதிவுகள் மற்றும் நில உடமை மாற்றங்களில் ஏற்படுத்தப்படும் சிவில் வழக்குகளுக்கு மனுதாரரே முழு பொறுப்பாவார்.

8. திறந்த வெளி இடத்திற்காக ஒதுக்கப்பட்ட நிலத்தின் வாயிலாக மனுதாரரால் விற்பனை செய்யப்பட உள்ள மனைநிலங்களுக்காக உயர் அழுத்த/சாதாரண மின் அழுத்த மின்சார லைன்கள் அமைத்து மின்சார வசதிகள் செய்து கொள்ள அனுமதியில்லை.

9.விற்பனை செய்யப்பட்ட வீட்டுமனைப்பிரிவுகளுக்கு உரிய நபர்கள் தனித்தனியே விதிமுறைகளின்படி விண்ணப்பிக்கும் பட்சத்தில் இறுதி வரன்முறை அங்கீகாரம் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

10. பார்வை 1,2,3,4 மற்றும் 5 –ல் காணும் அரசாணைகளில் குறிப்பிட்ட நிபந்தனைகள் பின்பற்றப்பட வேண்டும்.

11. சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும் விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். அதன் மேல் வேறு யாரேனும் தனிநபர் உரிமை

கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதி மன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம் இதனை முடிவு செய்ய ஊராட்சி துறை பொருத்தமான அமைப்பு அல்ல.

மேலும், மனுதாரரால் அளிக்கப்பட்டுள்ள விபரங்கள் சரியானவை அல்ல என்று ஏதேனும் பின்வரும் காலங்களில் அறியப்பட்டாலோ, அல்லது அரசு விதிமுறைகளை மீறப்பட்டாலோ உடனடியாக எவ்வித முன் அறிவிப்பின்றி மனைப்பிரிவு அங்கீகாரம் உத்தரவு ரத்து செய்திட ஏதுவாகும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

2(-12-21

**வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ)**
**பள்ளிபாளையம் வட்டாரம்**


21/12/2021

பெறுதல்

**திரு. O.P.S.மகாதேவன், த/பெ.G.P.சுப்பிரமணியம் (லேட்)**
**2/444, அமுதா காம்ப்ளக்ஸ், காமராஜ் நகர்,**
**ஓலப்பாளையம், குமாரபாளையம் அமானி கிராமம்,**
**குமாரபாளையம் வட்டம் , நாமக்கல் மாவட்டம் 638 183.**

நகல்

1) நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் நாமக்கல் மாவட்டம், அவர்களுக்கு பணிந்து அனுப்படுகிறது.
2) சார்பதிவாளர், குமாரபாளையம் அலுவலகம், நாமக்கல் மாவட்டம்
3) உதவி இயக்குனர் (ஊராட்சிகள்) நாமக்கல் மாவட்டம், அவர்களுக்கு பணிந்து அனுப்படுகிறது.
4) உதவி இயக்குனர் (நில அளவை) நாமக்கல் மாவட்டம், அவர்களுக்கு பணிந்து அனுப்படுகிறது.
5) தலைவர் , பல்லக்காபாளையம் ஊராட்சி, பள்ளிபாளையம் வட்டாரம்.
6) உபரி–2



## our services doesn't just end there

### Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

### Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

### Property Development & Approvals


Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

### NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

### Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



# empowering your real estate decisions with smart tools

## Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

## Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

## Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

## Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

## Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate